Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No.75/ 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | கிருஷ்ணன் | Calling: | விவசாயம் |
| Father's Name: | மவுந்துகவுண்டர் | Religion: | இந்து |
| Village: | நாராயணபுரம் | Age: | 61 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 09.10.2023

SIGN :

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 1 முதன்மை விசாரணை.

சுமார் 10 வருடத்திற்கு முன்பு பைபாஸ்மலையடிவாரத்தில் உள்ள நாகாலம்மன் கோவிலின் பூட்டை ஒரு நாள் உடைத்து உண்டியலை உடைதது பணத்தை எடுத்தும், ஆமில்பார் 2 ஐ எடுத்துக்கொண்டும் சென்றதாக அங்கு வேலை செய்யும் ஒரு அம்மா கூறினார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. திருடுபோன பொருட்கள் திரும்ப கிடைக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

நான் அந்தகோவிலில் என்ன நிர்வாக பொறுப்பில் உள்ளேன் என்றால் வருடத்திற்கு ஒரு முறை அன்னதானம் செய்வது வழக்கம். சம்பவம் குறித்து எனக்கு அந்த கோவிலில் வேலைசெய்யும் மாணிக்கம்மாள் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். மாணிக்கம்மாள் திருடுபோன அன்றைய காலையிலேயே என்னிடம் கூறினார் என்றால் சரிதான் அன்றைய தேதியிலேயே நான் திம்மாம்பேட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எழுதப்டாத வெள்ளை தாளில் ஒரு

கையொப்பம் பெற்றுக்கொண்டு புகாரை நாங்களே எழுதிக்கொள்கிறோம் என்று சொல்லி விட்டார்கள் என்றால் சரிதான். இன்று வரை அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் திருடுபோன பொருட்களை நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். திருடுபோன 5 நாட்கள் கழிதது புகார் மனு கொடுத்ததாக செல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான் இவ்வழக்கு விசயமாக போலிசார் என்னை மூன்று நாட்களுக்கு முன்பு தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கிருஷ்ணன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.